UNIVERSITY OF CAMBRIDGE INTERNATIONAL EXAMINATIONS
General Certificate of Education Advanced Subsidiary Level

**TAMIL LANGUAGE** **8689/02**

Paper 2 Reading and Writing **October/November 2009**

**1 hour 45 minutes**

Additional Materials: Answer Booklet/Paper

**READ THESE INSTRUCTIONS FIRST**

If you have been given an Answer Booklet, follow the instructions on the front cover of the Booklet.
Write your Centre number, candidate number and name on all the work you hand in.
Write in dark blue or black pen.
Do not use staples, paper clips, highlighters, glue or correction fluid.

Answer **all** questions.
Write your answers in **Tamil** on the separate Answer Paper provided.
Dictionaries are **not** permitted.
You should keep to any word limits given in the questions.

At the end of the examination, fasten all your work securely together.
The number of marks is given in brackets [ ] at the end of each question or part question.

**முதலில் இந்த அறிவுறுத்தல்களைப் படியுங்கள்**

உங்களுக்கு தரப்பட்டிருக்கும் விடை எழுதும் புத்தகத்தில் முதல் பக்கத்தில் உள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுங்கள்.
விடை எழுதும் புத்தகத்தைக் கொடுப்பதற்கு முன்னால் அதில் உங்கள் பெயர், உங்கள் எண்
உங்கள் தேர்வு நிலைய எண், ஆகியவற்றை எழுதுங்கள்.
கரு நீலம் அல்லது கருப்பு நிற பேனாக்களைப் பயன்படுத்துங்கள்.
ஸ்டேப்பிள்ஸ் பின்கள், பேப்பர் க்ளிப்புகள், பசை , திருத்தம் செய்யும் திரவம், ஹைலைட்டர்களைப் பயன்படுத்தாதீர்கள்.

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக.
தரப்பட்டுள்ள விடைத் தாளில் **தமிழில்** விடைகளை எழுதுக.
அகராதிகள் அனுமதிக்கப்படமாட்டாது
விடை எழுதுகையில் சொற்களின் அளவு குறிப்பிடப் பட்டிருந்தால் அதற்குள் விடை எழுதவேண்டும்.
விடைத்தாள்களை ஒன்றுடன் ஒன்று உறுதியாகக் கட்டுங்கள்.
ஒவ்வொரு வினா அல்லது வினாப்பகுதியின் இறுதியில் அதற்குரிய புள்ளிகள் அடைப்புக் குறிக்குள் [ ] தரப்பட்டிருக்கும்.

This document consists of **5** printed pages and **3** blank pages.

DC (SJH/TL) 18474/3
© UCLES 2009

UNIVERSITY of CAMBRIDGE International Examinations

**[Turn over**

www.xtremepapers.net

பகுதி — 1

முதலில் கீழே தரப்பட்டுள்ள பத்தியைப் படியுங்கள். பின்னர் வினாக்களுக்கு விடை அளியுங்கள்.

பொறுமை மிகவும் உயர்ந்த குணம். சகித்துக்கொள்கின்ற இந்தப் பண்பு மிகச் சிறுவயதிலேயே பிஞ்சு மனங்களில் விதைக்கப்படவேண்டும். பாருங்கள், நியுட்டனின் பொறுமை அவருக்கு எப்படி அழியாப் புகழ் தேடித் தந்துவிட்டது.

புகழ் பெற்ற விஞ்ஞானியான ஐசக் நியுட்டனைத் தெரியாதவர்கள் இருக்கமுடியாது. அவர் இருபது வருடங்கள் தொடர்ந்து ஒவ்வொரு நாளும் பல மணி நேரம் உழைத்து தமது ஆராய்ச்சி முடிவுகளைக் கண்டறிந்தார். அதைப் பல காகிதங்களில் எழுதி வைத்திருந்தார்.

ஒரு நாள் ஆராய்ச்சி முடிவுகள் எழுதி வைக்கப்பட்டிருந்த காகிதங்களை மேசை மீது வைத்துவிட்டு வெளியில் உலவச் சென்றார். மேசை மீது மெழுகுவர்த்தி ஒன்று எரிந்து கொண்டிருந்தது. அந்த அறையில் அவருடைய செல்ல நாயான 'டைமண்ட்' படுத்திருந்தது. அவர் சென்ற சிறிது நேரத்திற்குப் பிறகு அந்த நாய் அங்குமிங்கும் தாவிக்குதித்து விளையாட ஆரம்பித்தது. குதித்துக் குதித்து மேசை மீதும் பாய்ந்தது. ஒருமுறை அந்த மெழுகுவர்த்தியின் மீதே குதித்துவிட்டது. மெழுகுவர்த்தி சாய்ந்து அந்த காகிதங்களின் மேல் விழுந்தது. ஐசக் நியுட்டனின் இருபது வருட உழைப்பின் பலனான அந்தக் காகிதங்கள் கணநேரத்தில் சாம்பலாயின.

உலவச் சென்றிருந்த அவர் திரும்பிவந்தார். எரிந்துபோன காகிதங்களைக் கண்டு அவர் அடைந்த அதிர்ச்சிக்கு அளவேதும் இருக்க முடியுமா? எத்தனை வருட உழைப்பு அன்று வீணாயிற்று! யாராக இருந்தாலும் அந்த இடத்திலேயே அந்த நாயைக் கொன்றிருப்பார்கள். ஆனால் நியுட்டன் அப்படியெல்லாம் செய்யவில்லை. அவர் அதிர்ச்சி அடைந்தார். ஆனால் நிலை குலையவில்லை. பொறுமை அவரை ஆட்கொண்டது. மிகவும் பரிவுடன் அந்த நாயின் தலையை வருடினார். அன்புடன் சொன்னார் — ஓ டைமண்ட், என்ன காரியம் செய்துவிட்டாய்! இதன் மதிப்பு உனக்குத் தெரியுமா? என்று அமைதியாகக் கூறினார்.
மீண்டும் எழுதத் துவங்கினார். அதை முடிக்க மேலும் பல வருடங்களாயின.
அந்த நாயிடம் தான் அவருக்கு எத்தனை கனிவு! வாய் பேசாத அந்தப் பிராணி செய்த பிழையைப் பொறுத்ததன் மூலம் அவர்தாம் எத்தனை உயர்ந்துவிட்டார். அறிவில் மட்டும் அல்ல. பொறுமையிலும் நியுட்டன் உயர்ந்தவரே.

தெய்வப் புலவர் திருவள்ளுவர் கூட பொறுமையின் பெருமையைப் பற்றிப் பத்து குறள்கள் பாடியுள்ளார். தமக்கு தீங்கு செய்தவரைத் தண்டிப்பவருக்கு அந்த ஒரு நாளில் மட்டும்தான் இன்பம் கிடைக்கும். ஆனால் தீமையைப் பொறுத்தவர்க்கோ உலகம் அழியும் வரை புகழ் நிலைத்து நிற்கும் என்பது வள்ளுவன் வாக்கு.

© UCLES 2009


www.xtremepapers.net

1 கீழே தரப்பெற்றுள்ள ஒவ்வொரு விளக்கத்திற்கும் மிகப் பொருத்தமான சொல் அல்லது சொற்றொடரை மேலே கொடுக்கப்பட்டுள்ள பத்தியிலிருந்து எடுத்து எழுதுக.

புகை வண்டி ஓடும் பாதை —தண்டவாளம்

அ) அறிவியல் ஆராய்ச்சி செய்பவர் [1]
ஆ) பொறுத்துக்கொள்ளும் பண்பு [1]
இ) முதிர்ச்சி அடையாத இளம் உள்ளம் [1]
ஈ) பெயர் பெற்ற [1]
உ) வெளியே காலார நடத்தல் [1]

[மொத்தம் 5 மதிப்பெண்கள்]

2 கீழே தரப்பெற்றுள்ள ஒவ்வொரு சொல்லின் அல்லது சொற்றொடரின் பொருளும் தெளிவாகக் கூடிய வகையில் அவற்றை உங்கள் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக

எடுத்துக்காட்டு — அன்பு
விடை — குழந்தைகளிடம் பெற்றோர் அதிகம் அன்பு காட்டுகிறார்கள்

அ) உயர்ந்த குணம் [1]
ஆ) குதித்து குதித்து [1]
இ) அதிர்ச்சி [1]
ஈ) பரிவு [1]
உ) உழைப்பின் பலன் [1]

[மொத்தம் 5 மதிப்பெண்கள்]

3 பின்வரும் வினாக்களுக்கு தமிழில் விடை தருக. பத்தியிலிருந்து சொற்களையோ வாக்கியங்களையோ அப்படியே எடுத்தெழுதாது விடைகளைத் தருக.

1. நியுட்டன் தன் ஆராய்ச்சி முடிவுகளை எழுதி முடிக்க எத்தனை வருடங்கள் ஆயின அவற்றை எழுதி வைத்த காகிதங்கள் என்ன ஆயின? [3]

2. நியுட்டன் ஏன் நாயை தண்டிக்கவில்லை என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? [4]

3. தீமையைப் பொறுத்தவருக்கு உலகம் அழியும் வரை புகழ் இருக்கும் — இந்தக் கருத்து இந்த சம்பவத்தில் இருக்கிறதா? [4]

4. நியுட்டன் தன் ஆராய்ச்சி முடிவுகள் அனைத்தையும் மீண்டும் எழுதியது வேறு என்ன குணங்களைக் காட்டுகிறது? [4]

[சிறந்த மொழித் திறன் — 5]
[மொத்தம் — 20 மதிப்பெண்கள்]



www.xtremepapers.net

பகுதி— 2

## பொறுமையும் விடாமுயற்சியும்

பொறுத்தார் புவியை ஆள்வார் என்று தமிழில் ஒரு பழமொழி உண்டு. மனிதனுக்கு இன்றி அமையாத குணங்களில் ஒன்று பொறுமை. விடா முயற்சி, பொறுமை தன்னடக்கம், கோபமின்மை ஆகிய குணங்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையன. வாழ்க்கையில் வெற்றி பெற்றோரிடத்திலும் பெரியோர்களிடத்திலும் இந்தப் பண்பை நன்றாகக் காண முடியும் . ஒரு கன்னத்தில அறைந்தால் மறு கன்னத்தைக் காட்டு என்று ஏசு கிறிஸ்து கூறுகிறார். நிலம் தன்னை வெட்டுவாரையும் தாங்குவதைப் போல பெரியோர்கள் தங்களைக் குறை கூறுவோரையும் பொறுத்துக் கொள்வார்கள் என்று திருவள்ளுவர் கூறுகிறார். இந்துமத புத்தகமான பகவத் கீதையும் யோகிகளின் குணங்களில் பொறுமையையும் தன்னடக்கத்தையும் சேர்த்துக் கூறுகிறது.

எமர்சன் என்ற கவிஞரும் இதே கருத்தை வேறுவிதமாகக் கூறுவார் — '' அவனுடைய இருதயம் உலகு அளவுக்குப் பெரியது. ஆனால் அங்கே, ஒருவர் இழைத்த தவறுக்கு மட்டும் இடமில்லை.''. பிரௌவ்னிங் என்ற கவிஞர் — '' மன்னிப்பது நல்லது மறப்பதோ மிகச் சிறந்தது'' — என்பர். அலக்சாண்டர் போப் — ''தவறு செய்வது மனித குணம் ,அதை மன்னிப்பது தெய்வ குணம்'' என்கிறார். பிறருடைய பழிச் சொல்லைத் தாங்குவார் துறவியை விட மேலானவர் என்று வள்ளுவர் சொல்லுவார்.

பொறுமை உடையோருக்கு விடாமுயற்சி தானே வரும். விடா முயற்சி உடையோரை வெற்றி தேடி வரும். ராபர்ட் புரூஸ் என்ற மன்னரின் கதையைப் பலரும் அறிவர். ஸ்காட்லாந்து மன்னரான புரூஸ் பல முறை படையெடுத்து தோல்வி அடைந்தான். அவன் தங்கியிருந்த குகையில் ஒரு சிலந்தி கூடு கட்டிக் கொண்டிருந்தது. அதை எத்தனை முறை கலைத்தபோதும் அது மீண்டும் மீண்டும் வலை பின்னியது. இதைப் பார்த்த மன்னன் புத்துணர்ச்சி பெற்று மீண்டும் படையெடுத்து வென்றான். இந்து மத புராணக் கதையில் வரும் பகீரதன் என்ற மன்னன் நீண்ட காலம் தவம் செய்து கங்கை நதியைக் கொணர்ந்தான் என்பர்.

மகாத்மா காந்தியின் வாழ்க்கையில் நடந்த பல சம்பவங்கள் அவர் பொறுமையால் உயர்ந்ததைக் காட்டுகிறது. தென் ஆப்பிரிக்காவில் இனவேற்றுமை காரணமாக அவரை ரயில் பெட்டியிலிருந்து வெளியே தூக்கி எறிந்தபோதும் அவர் கோபப் படாமல் சிந்தித்தார். அதன் விளைவாகப் பிறந்ததுதான் அகிம்சை இயக்கம். அது அவரை உலகப் புகழ் பெற வைத்தது. இது பிற்காலத்தில் மார்டின் லூதர் கிங் போன்றோருக்கும் ஊற்றுணர்ச்சி நல்கியது.

கல்வி நிறுவனங்களில் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் பொறுமையின் சின்னமாகத் திகழ்கிறார்கள். பாடம் விளங்காத மாணவர்களுக்கு அவர்கள் மீண்டும் மீண்டும் பொறுமையுடன் சொல்லித் தருகிறார்கள். ஆண்களை விடப் பெண்களுக்கு பொறுமை அதிகம். இதனால்தான் பிரிட்டன் போன்ற நாடுகளில் கார் ஓட்டும் பெண்களுக்கு ஆண்களைவிட இன்ஸ்யுரன்ஸ் கட்டணம் குறைவு. பொறுமையும் விடாமுயற்சியும் இருந்தால் ஒருவர் எதையும் சாதிக்கலாம்.

© UCLES 2009



www.xtremepapers.net

**4** பின்வரும் வினாக்களுக்கு தமிழில் விடை தருக. பத்தியிலிருந்து அப்படியே சொற்களையோ வாக்கியங்களையோ எடுத்தெழுதாது உன் சொந்த வாக்கியங்களில் விடை தருக.

1. 'பொறுத்தார் புவியை ஆள்வார்' — என்ற பழமொழியிலிருந்து நீங்கள் அறிவது என்ன? [2]
2. பொறுமை பற்றி வள்ளுவர் கூறும் எடுத்துக்காட்டு என்ன? [2]
3. தவறுகளை மன்னிப்பது பற்றி பெரியோர்கள் என்ன கூறுகிறார்கள்? [3]
4. ஒரு சிலந்தி எப்படி ராபர்ட் புரூசுக்கு ஊற்றுணர்ச்சி தந்தது? [4]
5. அகிம்சை இயக்கம் எப்படி துவங்கியது? [4]

[சிறந்த மொழித் திறன் — 5]
[மொத்தம் — 20 மதிப்பெண்கள்]

**5** பின்வரும் வினாக்களுக்கு 140 சொற்களுக்கு மேற்படாமல் தமிழில் விடை தருக.

அ. பொறுமை பற்றி பல கவிஞர்களும் அறிஞர்களும் கூறும் கருத்துக்கள் என்ன? [10]

ஆ. தற்காலத்தில் உங்கள் பொறுமையைச் சோதிக்கும் விசயங்கள் எவை? [5]

[சிறந்த மொழித் திறன் — 5]
[மொத்தம் — 20 மதிப்பெண்கள்]

© UCLES 2009


www.xtremepapers.net

BLANK PAGE



www.xtremepapers.net

BLANK PAGE



www.xtremepapers.net

**BLANK PAGE**

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

University of Cambridge International Examinations is part of the Cambridge Assessment Group. Cambridge Assessment is the brand name of University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which is itself a department of the University of Cambridge.



www.xtremepapers.net